# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஹஸ்ரத் முஹையுதின் அல் கலீஃப.்.த்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)

ஜுமுஆ பேருரை

தலைப்பு :

அல்லாஹ்வின் அடையாளங்கள்

(பகுதி I)

13 MARCH 2020

(18 RAJAB 1441 A H )

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**

بِسْمِ ٱللَّٰهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

# The Signs of Allah (Pt.1)

## அல்லாஹ்வின் அடையாளங்கள் (பகுதி 1)

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்துக்கொண்டு, தஷஹுஃத், தஅவ்வுசு மற்றும் அல்.:.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.:.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையியை ஆரம்பித்தார்.

**அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்,** இந்த உலகத்தை அழிக்கும் கொரோனா வைரஸ் மற்றும் பிற பேரழிவுகள் குறித்து நான் இறைவனிடமிருந்த செய்திகளைப் பெற்றுருக்கிறேன். தற்போதைய சூழ்நிலையில் இந்த தலைப்பை அடிப்படையாகக் கொண்டு கவனமூட்டிய பிறகு இன்ஷா அல்லாஹ் அல்லாஹ்வின் பண்புகள் என்னும் தலைப்பின்பால் நான் திரும்புவேன்.

சீனாவில் என்ன நிகழ்கிறது? சீனா மற்றும் உலகெங்கிலும் உள்ள பிற நாடுகளில் கொரோனா வைரஸ் பரவியதன் விளைவாக நிலைமை மோசமடைந்துள்ளது. இந்த நிலைமை சிந்தனைக்கு உணவாகும். ஏனெனில் இஸ்லாத்திற்கு எதிராகவும் முஸ்லீம்களுக்கு எதிராகவும் யார் பகைமையை விதைக்கிறாரோ அவர் நிச்சயமாக இறைதண்டனையை

அறுவடை செய்வார். அல்லாஹ் திருக் குர்ஆனில் கூறுகிறான். **“அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த ஆன்மாவாலும் நம்பிக்கை கொள்ள இயலாது. அறிவைப் பெற்றிருந்தும் அதனால் சிந்தித்துச் செயல்படாதவர்களிடத்து அவன் தனது கோபத்தை இறக்குகின்றான்” (10 : 101)**

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து பல பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. பேரழிவுகளுக்கு மேல் பேரழிவுகள் என்று ஒவ்வொருவரும் கூறமுடியும். நீங்கள் ஒரு ஆய்வை மேற்கொள்ளுங்கள், இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அதாவது 2001 –ஆம் ஆண்டு முதல் நிகழ்ந்த அனைத்தையும் சிந்தித்துப் பாருங்கள். அஹ்மதியா முஸ்லீம் ஜமா அத்திலிருந்து என்னை வெளியேற்றப்பட்டதிலிருந்து அவை ஆரம்பித்தன. அங்கிருந்து எனக்கு ஏராளமான சோதனைகளை எதிர்கொள்ள வேண்டிய பல நிகழ்வுகள் நடந்துள்ளன. தீவு முழுவதிலும் உள்ள அனைத்து அஹமதியா பள்ளிகளிலும், அண்டை தீவுகள் மற்றும் பிற நாடுகளிலும் கூட எனக்கு எதிராக வெறுக்கத்தக்க பிரச்சாரங்களை அவர்கள் மேற்கொண்டார்கள். ஏன் இந்த பகை? நான் ஒரு திருடன் அல்ல, மோசடி செய்பவன் அல்ல, ஒரு பொய்யன் அல்ல, ஒரு கட்டுக்கதை தயாரிப்பவன் அல்ல, நான் சிலை வணக்க வழிப்பாட்டின் போதகரும் அல்ல! இல்லை, நான் அத்தகையவன் அல்ல. ஆனால் இந்த புறக்கணிப்புகள் மற்றும் கேலிக்கூத்துகள் போன்ற அனைத்து வகையான சோதனைகளையும் நான் கடந்து செல்ல வேண்டியிருந்தது. **உண்மை இதுவாகும், அல்லாஹ் என்னிடம் பேசுகிறான் என்றும் நான் இறை வெளிப்பாட்டைப் பெறுகிறேன் என்றும் அறிவித்திருந்தேன். இதை பிரகடனப்படுத்தியதன் காரணமாக மட்டுமே எல்லா வழிகளிலும் நான் புறக்கணிப்பு மற்றும் எள்ளிநகையாடல்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. எல்லா சூழ்ச்சிகளும் சதிகளும் இருந்தபோதிலும் அல்லாஹ் தனது செய்திகளை தொடர்ந்து எனக்கு வெளிப்படுத்திவந்தான். எல்லா வகையான அடையாளங்களையும் அவன் வெளிப்படுத்தி வந்தான். இதனால் இந்த மக்களும் மனித குலமும் சிந்தித்து, தங்கள் நடத்தையை சீர்திருத்திக்கொள்வதற்கு பல வகையான அடையாளங்களை அவன் வெளிப்படுத்தினான். இதனால் காத்திருக்கும் ஆபத்துகள் குறித்து மனித குலத்தை எச்சரிப்பதற்கு இந்த வெளிப்பாடுகள் வானத்திலிருந்து மழை போல் தொடர்ந்து பொழிந்துக்கொண்டிருந்தது.**

இந்த விஷயத்தில் நான் பல பிரசங்கங்களை வழங்கியுள்ளேன். மனித குலம் ஆபத்தில் உள்ளது என்ற எனது பிரசங்கங்களில் ஒன்று லிமொரிஷியன் செய்தித்தாளில் கூட வெளிவந்தது. நீங்கள் புரிந்துக்கொள்ளுங்கள், அல்லாஹ் ஒரு நபியை அனுப்பும்போது, அவருக்கு செய்திகளை அவன் வழங்குகிறான். அதன் மூலம் அவன் உலகத்தை எச்சரிக்கின்றான். பின்னர் மக்கள் தங்கள் வாழ்க்கையை சீர்திருத்தவும், தீமையிலிருந்து விலகி சரியான பாதையில் செல்லவும் ஒரு குறிப்பிட்ட நேரம் வழங்கப்படுகின்றது. மேலும்,

இந்த தூதர் சரியான பாதையில் செல்ல அனைவருக்கும் நற்செய்தியை வழங்குகிறார். இறைவன் மற்றும் இறை செய்திகளை உண்மையாக நம்புவதற்கும், நல்ல செயல்களைச் செய்வதற்கும், ஏக இறைவனாகிய அல்லாஹ்வுக்கு அடிபணிந்து விடுவதற்கும் அவர் மக்களுக்கு அறிவுரை வழங்குகிறார்.

அவரது வாழ்நாள் முழுவதும் செயல்பட்டால், மிகச் சிலரே இதை ஏற்றுக்கொள்கிறார்கள், இறைத்தூதர் மற்றும் இறைவெளிப்பாட்டை சிலர் மட்டுமே ஏற்றுக்கொள்கிறார்கள். இது, சில நேரங்களில் அவரது வாழ்க்கையின் கடைசி மணி நேரங்களில் கூட ஆகலாம். ஆனால் அவரது மரணத்திற்குப் பிறகு, பல வருடங்களுக்குப் பிறகு தான் அவருடைய உண்மைத்தன்மை மற்றும் அவர் கொண்டு வந்த இறை அடையாளங்களை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

எனவே, இறைத் தூதரின் வாழ்க்கையின் போது பெரும்பாலான மக்கள் அவரிடமிருந்து முகம் திரும்பிச் செல்கின்றனர். அவர்கள் காது கேளாதவர்களாகவும் குருடர்களாகவும் இருப்பார்கள். மேலும் அவரையும் அவரது செய்திகளையும் அழிக்க அவர்கள் எல்லா வகையான தீய திட்டங்களையும் தீட்டுவார்கள்.

உங்களுக்கு முன் நான் ஓதிய இந்த இறை வசனத்தின் மூலம் உங்களுக்கு உணர்ந்து சிந்திக்க முடியும். நம்பிக்கை கொள்ளாததற்கு ஒரு சாக்குப் போக்காக இந்த வசனத்தை பயன்படுத்தக் கூடாது. அது உங்களிடமே கூறுகிறது. நாங்கள் இருப்பது போலவே நாங்கள் இருக்க வேண்டும் என்று விரும்பியதும் தீர்மானித்ததும் கடவுளே என்று நீங்களே சொல்லுங்கள்.

நம்பிக்கை கொள்வது என்பது ஒரு தற்செயல் அல்ல. இது ஒரு அறிவார்ந்த செயல் முறையின் விளைவாகும். அதற்கு நமது மனசாட்சி, நமது மனநிலை மற்றும் நியாயமான, விவேகமான, தர்க்கரீதியானவற்றின் வெளிச்சத்தில் அவற்றை விமர்சித்து, இயற்கையின் சட்டத்திற்கு இணங்க செயல்பட வேண்டும். நம்பிக்கை கொள்வது என்பது மனிதனுக்கு அசாதாரணமானது. அதை செய்வதன் மூலம் அவர் உண்மையாகவே தனது இயல்புக்கு ஏற்றவாறு இருக்கிறார். அல்லாஹ் நம்மிடம் கூறுகிறான் **“அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள இயல்பைப் பின்பற்றுங்கள். அதற்கேற்பவே அவன் மனிதனைப் படைத்துள்ளான். அல்லாஹ்வின் படைப்பில் எந்த மாற்றமுமில்லை” (30 : 31)**

உலகில் என்ன நடக்கிறது என்பதில் விழிப்புடன் இருங்கள். இவ்வுலகம் என்னவாகிறது? பேரழிவுகளுக்கு பிறகு மீண்டும் பேரழிவுகள், அதன் முடிவைக் காணவில்லை.

ஆயிரக்கணக்கான பேரழிவுகள், அவற்றிலிருந்து இந்த நூற்றாண்டின் சில பேரழிவுகளை சுருக்கமாக உங்களுக்கு நினைவூட்டுகிறேன். ஏனெனில் இந்த நூற்றாண்டின்

ஆரம்பத்திலிருந்து படைத்தவன் என்னை தனது தூதராக தேர்ந்தெடுத்துள்ளான். அது இஸ்லாமிய வருடத்தின் அடிப்படையிலாகட்டும், பொது வருடத்தின் அடிப்படையிலாகட்டும், ஒரு வேளை நீங்கள் அதை மறந்திருப்பீர்கள்.

1. கத்ரீனா சூறாவளி அது அமெரிக்காவில் நியூ ஆர்லியன்ஸை அழித்துவிட்டதுடன் உலகையும் உலுக்கியது. (இறை வெளிப்பாட்டின் ஆரம்பத்திலிருந்து, நடக்கவிருக்கும் அனைத்தையும் அல்லாஹ் எனக்கு வெளிப்படுத்தியிருந்தான், என்னைச் சுற்றியுள்ள மக்கள் அதைக் கண்டார்கள். அவர்கள் இந்த வெளிப்பாடுகளையும் பிற தீர்க்கதரிசனங்களையும் எழுதியிருந்தார்கள். பின்னர் நான் பொய் சொல்கிறேன் என்று இந்த மக்கள் நினைத்தால், அவர்கள் என்னை மறுத்துக் கொண்டு அல்லாஹ்வின் பெயரில் சத்தியம் செய்யவும், என்னை பொய்யர் என்று அழைக்கவும் முன்வர நான் அழைக்கிறேன்.

இந்த வெளிப்பாடுகளில் சிலது உண்மையாகிவிட்ட போது, இந்த வெளிப்பாடுகள் புலனாகிவிட்டதைப் பற்றி என்னை தெரிவிக்க எனக்கு ஏராளமான தொலைபேசி அழைப்புகள் வந்தன. அதே நேரத்தில், என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியாது. இந்த வெளிப்பாட்டின் உணர்தலை எனக்குத் தெரிவிக்க அவர்கள் எல்லா இடங்களிலும் என்னை தேடினார்கள். என்னைப் பொறுத்தவரை நான் என் பிரார்த்தனையிலும் தியானத்திலும் கவனம் செலுத்திய நிலையில் பை அத்துல் திக்கிரில் இருந்தேன்.

**நான் இந்த தியான நிலையில் இருக்கும்போது, நான் இந்த உலகத்திலிருந்து துண்டிக்கப்பட்டு, தனது, தாயின் அன்பையும் ஆறுதலையும் தேடும் குழந்தையைப் போல என் படைப்பாளனின் கைகளில் என்னை அர்ப்பணித்து விடுகிறேன். அல்லாஹ்விடம் இணைந்திருப்பது தாய் அன்பைவிட இனிமையானது. இது எவ்வளவு நேர்த்தியானது என்று உங்களுக்கு கற்பனை கூட செய்ய முடியாது. இறைவெளிப்பாட்டின் ஆரம்பத் தருணங்களில் எவ்வாறிருந்ததோ அவ்வாறுதான் இப்போதும் தொடர்கிறது. இதைவிட வேறு எதுவும் நான் விரும்பவில்லை. என் இறைவனின் அன்பை மட்டுமே நான் விரும்புகிறேன்.** எனவே நான் மீண்டும் விஷயத்திற்கு வருகிறேன்.

இந்த நிகழ்வு உலகின் மிக சக்திவாய்ந்த நாடுகளில் கூட, அதாவது தொழில்நுட்பரீதியாக பொருத்தப்பட்ட மற்றும் பொருள் ரீதியாக பூர்த்தி செய்யப்பட்டவை அனைத்தும் இந்த இயற்கையின் ஆற்றல் வாய்ந்த முகத்திற்கு முன் மிகக் குறைவானவை மற்றும் புறக்கணிக்கத்தக்கது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில், இயற்கை பேரழிவுகள் ஒன்றின் பின் ஒன்றாக வந்து கொண்டிருக்கின்றன. மேலும் இதுபோன்ற செய்திகளின் அறிக்கைகள் ஒரு போர்க்களத்திலிருந்துள்ள செய்திகள்

போல ஒலித்தன. ஆனால் இந்த முறை இயற்கை, மனித குலத்திற்கு எதிராக இருப்பதாக தெரிகிறது.

2. புலம் பெயர்ந்த பறவைகள் காரணமாக தென் கிழக்கு ஆசியாவிலிருந்து யூரோப் வரை பறவை காய்ச்சல் பரவியுள்ளன. அதன் விளைவாக ரஷ்யனில் ஐந்து பிராந்தியங்களை தனிமைப்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. "H7N3H" வகையின் மிகக் குறைவான ஆபத்தான "ஆவேன் வைரஸ்" கூட மனிதர்களுக்கு பரவக்கூடும் என்று செப்டம்பர் 14, 2005 அன்று இத்தாலியா விஞ்ஞானிகள் அறிவித்தனர். ஏற்கனவே மனித காய்ச்சல் பாதிக்கப்பட்ட மனிதர்களுக்கு ஆவேன் வைரஸ் பரவுவதன் மூலம் அது மிக ஆபத்தான தொற்று நோயை உருவாக்கும் வகையில் அமையும்.

3. இந்தியா மற்றும் நேபாலில் ஏற்கனவே ஜப்பானிய என்செபாலிட்ஸ் என்னும் தொற்று நோய் ஏற்பட்டுள்ளது. இது காரணமாக சுமார் 700 பேர்கள் உயிரிழந்தனர்.

4. சீனாவில், பாதிக்கப்படுபவர்களிடையே மிக அதிகமான இறப்பு விகிதத்தைக் கொண்ட பன்றி தொற்று நோயைத் தவிர, சீனாவின் தெற்கு மாகாணங்களில் பல விவசாயிகளின் உயிரை பறித்த ஒரு புதிய அறியப்படாத தொற்று நோயின் தோற்றத்தை நாம் கண்டோம்.

5. சுனாமி (இந்த சுனாமி தோன்றிய அன்றைய நாள் காலை அதாவது தஹ்ஜ்ஜுத் தொழுகையின் போது, பல நாடுகளைத் தாக்கக்கூடும் ஒரு பெரிய சுனாமியை அல்லாஹ் என்னை காணச் செய்தான். அதே நேரத்தில்தான் **"துபானே சலாத் ஸே யா ரப் து பசாதேனா"** என்று உருது மொழியில் ஒரு கவிதையும் நான் கேட்டேன். அன்றைய நாள் காலையில், ஜமா அத்தே அஹ்மதியா அல் முஸ்லீமீனின் தோழர்களிடம் சேர்ந்து பிளயின் ஷாம்பெயின் என்ற இடத்திற்கு ஒரு பயணம் செய்ய ஏற்கனவே நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம்.

   சலாத் உல்.'. பஜ்ருக்குப் பிறகு அங்கு அமர்ந்திருந்த இளைஞர்களிடம் ஒரு பெரிய சுனாமியின் வருகை குறித்து அல்லாஹ் எனக்குக் காட்டியதைப் பற்றி நான் சொன்னேன். பயணம் செய்ய வெளியே செல்வதற்கு முன் அங்கு அமர்ந்திருந்த நாங்கள் நீண்ட நேரம் துவா செய்தோம். பின்னர் நாங்கள் ஒரு மினி பஸ்ஸில் சவாரி செய்தோம். பயணம் ஆரம்பித்த போதுதான் வானொலியில் செய்தியின் நேரம் வரும்போது செய்தியைக் கேட்க ரேடியோ ஆன் செய்யுமாறு நான் ஓட்டினரிடம் சொன்னேன். ஆனால் காலையில் இருந்து மதியம் மூன்று மணிவரை, செய்திகளில் எதுவும் இல்லை, எல்லாம் நல்லமுறையாக நடக்கிறது போல இருந்தது. பயணம் முடித்து நாங்கள் திரும்ப வீட்டிற்கு சென்றோம். குளித்து ஓய்வுபெறும் நேரத்தில்

அஹ்மதியா அல்முஸ்லீமீனின் இரண்டு இளைஞர்கள் என்னை தொலைப் பேசியில் அழைத்து இந்தோனேசியாவில் சுனாமி பற்றி பிரேக்கிங் செய்தி வருவதாக அவர்கள் கூறினார்கள். 2004 டிசம்பரில் தெற்காசியாவில் ஏற்பட்ட சுனாமியால் சுமார் 300,000 பேர் உயிரிழந்தனர். பல ஐரோப்பியா நாடுகளும் பெரிதும் வெள்ளத்தில் மூழ்கின.

6. ரஷ்யா, போர்ச்சுகல் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளை பெரிதும் ஆபத்துக்குள்ளாகிய தொடர்ச்சியான காட்டுத் தீயையும் மறந்து விடாதீர்கள்.

7. இப்போது விமான விபத்துக்கள் பற்றிய அறிக்கைகள் மக்களை ஆச்சரியப்படுத்தாத ஒரு சாதாரண நிகழ்வாக மாறிவிட்டது. நீங்கள் பார்த்தால், எத்தனை எத்தனை விமான விபத்துகள் நிகழ்ந்தன என்பதையும், விமான விபத்துக்குள்ளாகி எத்தனை எத்தனை மக்கள் உயிரிழந்தனர் என்பதையும் நமக்கு காண முடியும்.

இவை அனைத்தும், சுருக்கமாக, இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நான் பெற்ற வெளிப்பாடுகளின் ஒரு பகுதியாகும். இறைவெளிப்பாட்டின் ஆரம்பத்திலிருந்து, இந்த வெளிப்பாடுகளின் உண்மைத்தன்மைக்கு சாட்சியமளித்தவர்கள் பலர் உள்ளனர். இன்றும், இந்த நிகழ்வுகள் அனைத்தும் எனது உண்மைத் தன்மை மற்றும் இந்நூற்றாண்டின் இறைவெளிப்பாடுகளின் அறிகுறிகளாகும்.

நான் இறைவனிடமிருந்து வெளிப்பாடுகளைப் பெறுகிறேன் என்ற உண்மையை கூறியதன் காரணமாகத்தான் இவர்கள் எனக்கு எதிராக பல சிரமங்களையும், சதிகளையும் உருவாக்கினார்கள், ஒழுங்கின்மையாக நடந்துக் கொண்டார்கள், எனக்கு எதிராக பெரிய பொய்களைப் பிரச்சாரம் செய்தார்கள்.

**இன்று நான் என் மீது நம்பிக்கைகொண்ட அனைவருக்கும் அதைபோல் என் மீது நம்பிக்கை கொள்ளாத அனைவருக்கும் கூறுகிறேன். என்னைப் பொறுத்தவரை, நான் என் வேலையைச் செய்கிறேன். நான் தொடர்ந்து செய்தியைத் தருகிறேன். படைப்பாளனுக்கு முன் உங்கள் செயல்களுக்கு நீங்கள் பதிலளிக்க வேண்டிய ஒரு நான் நிச்சயமாக வரும். அந்த நாள் வரும், எந்த சந்தேகமும் இல்லை. இன்ஷா அல்லாஹ். எனவே எழுந்திருங்கள், உங்கள் பாவங்களையும் பலவீனங்களையும் பற்றி விழிப்புணர்வு பெற்றுக் கொள்ளுங்கள், தாமதத்திற்கு முன்பே உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள்.**

நம் உலகில் என்ன நிகழ்கிறது? இந்த நிகழ்வுகள் அனைத்தும் ஏன் அடிக்கடி நிகழ்கின்றன? இதே போன்ற பேரழிவுகள் முன் காலங்களிலும் இருந்தன என்று விஞ்ஞானிகள் வரலாற்றில் கூறுகிறார்கள். 1918 –ஆம் ஆண்டில், இன்.ஃப்ளுயன்ஸா தொற்று நோயால் 18 மாதங்களில் 20 மில்லியன் மக்கள் துயரமடைந்தனர். பைபிள்

வெள்ளப்பெருக்கத்தைப் பற்றி சொல்கிறது. அதற்கு காரணம் அன்றைய மக்களின் ஒழுக்கத்தில் ஏற்பட்ட பெரும் குலைவு தான் என்று கூறப்படுகிறது. இந்த பேரழிவின் உறுதியான ஆதாரங்களை ஏற்கனவே விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எடுத்துக் காட்டாக, பெருங்கடலின் அடிப்பகுதியில் பல நகரங்கள் மற்றும் கட்டிடக் கலை துண்டுகள் போன்றவை கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

திருக்குர்-ஆனில் அல்லாஹ் கூறுகிறான்.

**"மறுமை நாளிற்கு முன்னர் நாம் அழித்து விடாத, அல்லது கடினமான தண்டனையளிக்காத எந்த ஊரும் இப்பூமியின் மேற்பரப்பில் இருக்காது. இது இறைவனது நியதியில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டதாகும்" (17 : 59)**

தண்டனைகளை அனுப்புவதற்கு முன்பு இறைவன் தனது எச்சரிக்கைகளை (பூகம்பம், போர்கள், தொற்று நோய்கள் போன்றவை) அனுப்புகிறான் என்பதையும், வெளிப்படையான காரணமின்றி அவன் ஒரு போதும் பொதுவான பேரழிவுகளை அனுப்புவதில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். **"எச்சரிப்பவர்கள் (அனுப்பப்பட்டு) இராத எந்த நகரத்தையும் நாம் ஒரு போதும் அழித்ததில்லை" (26 : 209)**

**"ஜின்னும் மனிதர்களுமாகிய கூட்டத்தினரே! உங்களிடமிருந்தே உங்களிடம் தூதர்கள் வந்து, உங்களுக்கு எனது வசனங்களைப் படித்துக் காட்டி, உங்களுக்குரிய இந்த நாளைச் சந்திப்பது குறித்து உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யவில்லையா? இதற்கு அவர்கள், நாங்களே எங்களுக்கு எதிராக சாட்சி பகர்கின்றோம் என்பார்கள். மேலும் உலக வாழ்க்கை அவர்களை ஏமாற்றிவிட்டது. எனவே அவர்கள் நிராகரிப்பவர்களாயிருந்தனர் என அவர்கள் தங்களுக்கு எதிராகத் தாங்களே சாட்சி பகர்வர்" (6 : 131)**

இயற்கை சுற்றுச் சூழலுக்கும் மனித சமூகத்தின் ஒழுக்கத்திற்கும் இடையிலான தொடர்பு மற்றும் அவை ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதன் மூலம் இயற்கை பேரழிவுகளுக்கான காரணத்தை சில விஞ்ஞானிகள் விளக்குகிறார்கள். நல்ல மற்றும் கெட்ட எண்ணங்களுக்கு நமது சுற்றுச் சூழலை மாற்ற முடியும் என்பதை ஜப்பானிய விஞ்ஞானி டாக்டர் எமோடோ உலகுக்குக் காட்டியுள்ளார். அவரது அனுபவத்தில், ஒரு நபர் நல்ல எண்ணங்களை கடத்தும் போது, நீர்படிகங்கள் தூய பிரகாசமான வண்ணங்களுடன், அழகான, இணக்கமான வடிவமைப்பை உருவாக்குகின்றன; ஒருவர் தவறான எண்ணங்களை கடத்தும்போது, இந்த நீர்படிகங்கள் அழிக்கப்பட்டு, ஒரு மோசமான, இருண்ட வடிவமைப்பை உருவாக்குகின்றன. பிற ஆய்வுகள்,

உயிரினத்திலிருந்து வரும் அனைத்து தகவல்களும் தண்ணீரில் உள்ளடக்கம் செய்யப்படுகின்றன என்பதை காட்டுகிறது. இந்த தகவல்கள் காலவரையின்றி தண்ணீரில் இருக்க முடியும்.

இந்த அனைத்து துன்பங்களுக்கு பிறகு இந்த உலகில் என்ன நிகழ்கிறது என்பதைப் பற்றி மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இயற்கை பேரழிவுகளுக்கும், நன்னெறிப் பண்புகளின் வீழ்ச்சிக்கும் ஏதேனும் தொடர்பு இருந்தால், தாமதமாகிவிடும் முன், மனித குலம் அதை விரைவில் புரிந்து கொள்ள பிராத்திப்போம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்.

**“உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால், அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றின் விளைவினாலேயாகும். அவன் உங்கள் பாவங்களுள் அதிகமானவற்றை மன்னிக்கிறான்”** (42 : 31)

**“மக்களின் கைகள் செய்த செயல்களினால், நிலத்திலும் கடலிலும் குழப்பம் பரவியுள்ளது. இதனால் அவர்கள் தங்கள் தீய செயல்களிலிருந்து திரும்புவதற்காக, இறைவன் அவர்களை, அவர்களின் செயல்களுள் சிலவற்றை சுவைக்க வைப்பான்”** (30 : 42)

அல்லாஹ் நன்கு அறிபவனாக இருக்கின்றான். அல்லாஹ் தனது நேர்மையான ஊழியர்களிடம் கருணை காட்டுவானாக. எல்லா கடினமான சூழ்நிலைகளிலிருந்தும் நம்மை அவன் பாதுகாப்பானாக. மேலும் எல்லா மனிதர்களிடமும் அல்லாஹ் இரக்கம் காட்டட்டும். மனித குலம் தன்னிடம் திரும்ப வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகிறான். இது எல்லாவற்றையும் உருவாக்கி, நமக்கு எல்லாவற்றையும் தந்தருளிய படைப்பாளனின் ஒரு எளிய கோரிக்கையாகும். எனவே உலகம் இதை மிக விரைவாக புரிந்து கொள்ள நமக்கு பிரார்த்தனை செய்வோம். இன்ஷா அல்லாஹ்.

கூடுதலாக, மொரீஷியஸின் நிலைமை பற்றியும், அரசியல் சூழ்நலை பற்றியும், தீவை பல்வேறு வழிகளில் தாக்கிய பேரழிவுகள் குறித்தும் ஹுஸுர் அவர்கள் பேசினார். கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்துவருவதை நாம் பார்கிறோம். இதன் விளைவாக, நாட்டின் சுதந்திரத்தின் 52-வது ஆண்டு விழா கொண்டாட முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. அரசாங்கம் பள்ளிகளை மூடியுள்ளது. குழந்தைகள் வீட்டில் உள்ளன. மேலும் அவர்களின் சுதந்திர தினத்தை இழந்து விட்டனர். நாட்டு மட்டத்தில் கூட, தேசிய விடுமுறை கொண்டாட்டம் இல்லை. அதைத் தொடர்ந்து ஹுஸுர் அவர்கள் 2020 மார்ச் 9 – ஆம் தேதியன்று பெற்ற இறைவெளிப்பாடுகளைப் பற்றி பேசினார்.

# REVELATIONS

**வெளிப்பாடுகள்**

**09 மார்ச் 2020**

**பிஸ்மில்லாஹி ரஹ்மானிர் ரஹீம்**

(எல்லா நாடுகளிலும் தன்னுடைய இந்த சமூகத்தை (ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம்) அவன் பரப்புவான் என்பதையும், சான்றுகள் மற்றும் ஆற்றல்மிக்க வாதங்களுடன் மற்ற அனைத்திற்கும் மேல் இந்த ஜமா அத்தை அவர் வளர செய்வான் என்பதையும் அல்லாஹ் இன்று எனக்கு வெளிப்படுத்தியுள்ளான்.)

***"என் கலீ:பா முனீர் அஹமது அஸீம், உலகம் முழுவதும் பயணம் செய்யுங்கள். உமது படைப்பாளனின் பால் மக்களை அழைத்துக் கொள்ளுங்கள். இதுவேயன்றி உங்கள் வேலை வேறு ஒன்றும் இல்லை. நீர் என் கலீ:பாவாக இருக்கின்றீர்கள். எனக்கு மட்டும் நீங்கள் கீழ்படியுங்கள், மற்ற படைப்பினங்களுக்கு கீழ் படிய வேண்டாம். அந்த நாடகள் வந்து கொண்டிருக்கின்றன. அவை வாசலில் உள்ளன. இந்த மதம் முழு உலகிலும் பிரதானமாக இருக்கும். உலகின் அனைத்து நாடுகளிலும் உங்கள் கால் பாதங்களை வைத்துவிடுங்கள். உங்கள் மீது நம்பிக்கை கொள்ளும் அனைத்து மக்கள் மீது நான் அருட்கொடைகளை பொழிவேன். மேலும் எல்லோரும் உங்கள் மீது மிகுந்த மரியாதையை செலுத்துவார்கள். உங்கள் எதிரிகள் அனைவரும் அழிவையும் தோல்வியையும் எதிர்கொள்வார்கள். நான் உன்னுடன் இருக்கிறேன். எனக்கு மட்டும் கிழ்ப்படியுங்கள்".***

**Translated by:**

Naib Amir **Azim Ahmad**


**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***


**Ph. No: 917502272774**